Arimaa Nokku Journal ISSN: 2320-4842
(UGC Care Group-I Journal) Vol-18 No. 03 July-September 2024

# காலப்போக்கில் வளரி

**முனைவர். ரா. நந்தினி,**

**உதவிப்பேராசிரியர்>**

**காங்கேயம் இன்ஸ்டியூட் ஆ.ஃப் காமர்ஸ்>**

EBET **அறிவுப் பூங்கா>**

**நத்தக்காடையூர் காங்கேயம் தாலுகா>**

**திருப்பூர்** - 638108.

## முன்னுரை

வளரி என்பது பண்டைய காலத்தில் தமிழர்கள் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட ஒருவகை கருவி. வளரி என்ற பெயர் வாள் என்ற பெயரிலிருந்து வந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். தொலைவில் இருக்கும் எதிரியைத் தாக்குவதற்குச் சிறந்த ஆயுதமாக வளரி விளங்குகிறது.

வளரி போன்று இருக்கக் கூடிய கருவிகளை எரிவளை, திகிரி, வளைதடி, பாறாவளை, சுழல்படை, படைவட்டம் என்றெல்லாம் அழைத்தனர். மரத்தாலும், இரும்பாலும், தந்தத்தாலும் வளரி செய்து பயன்படுத்தினர். எழும்பூர், இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் சில அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தியுள்ளனர்.

பண்டையகாலத்தில் மக்களின் பாதுகாப்பிற்காகவும் வீரத்திற்காகவும், எதிரிகளை வீழ்த்துவதற்காகவும் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. பண்டைய தமிழர்களின் வீரக்கலைகளில் ஒன்று வளரி வீசுதல்.

## வளரியின் பண்புகள்

இக்கருவி தட்டையாகவும் (Flat),வளைக்கோன வடிவிலும், ஒருபுறம் கனமாகவும், மற்றொருபுறம் இலேசாகவும், கூர்மையான வெளிப்புற விளிம்புடன் வடிவமைத்தார்கள். இயக்க எதிர்வினையை உண்டாக்கியவாறு காற்றில் வேகமாகச் சுழன்று சென்று இலக்கைத் தாக்கும். இலக்கைத்தாக்கிவிட்டு திரும்பிவரும் வண்ணமும், திரும்பாத வண்ணமும் வளரியை எறிய முடியும் காற்றை எதிர்த்து இலக்கை நோக்கி துல்லியமாத் தாக்கும் திறன் கொண்டது வளரி.

## பூமராங்

ஆஸ்திரேலியாவில் வளரியை பூமராங் என்ற பெயரில் அழைத்து வந்திருக்கின்றன. பழங்குடியினர் வேட்டையாடுவதற்காகவும், விளையாட்டுப் போட்டிகளுக்காகவும், பொழுதுபோக்காகவும் பயன்படுத்தியுள்ளனர். இந்த பூமராங் மரம் மற்றும் எழும்புகளால் செய்யப்பட்டிருந்திருக்கின்றன.

## பண்டைய தமிழர்களின் வளரி

பண்டையதமிழர்கள் மான் வேட்டைக்காகவும், போருக்காகவும், தப்பித்து ஓடியவரை உயிருடன் பிடிப்பதற்காகவும் பயன்படுத்தியுள்ளனர். வளரி காற்றில் வேகமாகச் சுழன்று சென்று இலக்கைத் தாக்கிவிட்டு எரிந்தவரிடம் திரும்பவந்து சேர்ந்துவிடும். திரும்பவரும் வளரி எறிந்தவரையே தாக்கவல்லது. எனவே எறிந்தவர் கவனமாகக் கையாளவேண்டும்.

1710-ல் விஜயசேதுபதி மன்னர் தனது மகளை மணமுடித்து வைக்கும்போது சீர் மரபாகத் தன் ஆயுதத்தை வைத்துள்ளனர் என்று, கல்வெட்டு இதலில் குறிப்பிடப்பட்டுள்ளது. போர் புரியும் மன்னர்கள் தனது கொண்டையில் வளரியை சொருகிவைத்திருப்பார்கள். பின் கொண்டையில் இருந்து உருவி எதிரிகளை வீழ்த்துவார்கள். நூறு கஜதூரம் செல்லக்கூடியது. கண்ணிமைக்கும் நேரத்தில் எதிரிகளின் தலையைத் துண்டிக்கவல்லது. 1801 -ம் ஆண்டு ஆயுதச் சட்டத்தின்படி, பாளையக்காரர்கள், போர்வீரர்கள், கள்ளர்கள் வளரி ஆயுதத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று ஆணை பிறப்பித்தனர்.

காற்றைக் கிழித்து கண்ணிமைக்கும் நேரத்தில் கதையை முடிக்கும் இந்த வளரி ஆங்கிலேயர் காலத்தில் பல ஸ்தம்பதிகளை தம்பிக்கவைத்த ஒன்று. இனி எதிர்காலத்தில் இந்தக்கலையை எவரும் கற்றுவிடக்கூடாது என்பதற்காகவே சட்டம் போட்டான். எதிர்த்தவனைத் தடுத்தான். மீறிவீசியவர்களைக் கொன்றான்.

இப்போது பாதுகாப்பாகவும், கண்காட்சியாகவும் வைக்கப்பட்டுவருகிறது. இராமநாதபுரம் இராமவிலாசத்தில் தொல் அறிவியல் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. 1883-ம் ஆண்டு மதுரையில் இருந்ததாகவும் கோவிலார் குளம் வீட்டில் இருநூற்று ஐம்பது வளரி ஆயுதம் வைத்து வழிபாடு உள்ளதாக குறிப்புகள் உள்ளது.

தமிழரின் தொன்மை ஆயுதம் வளரி. வளரி என்னும் இந்தப்பெயர், தமிழ் சமூகத்தின் ஞாபகத்தில் இருந்தே முற்றிலுமாக அழிந்துவிட்டது .வளரி, வளை எறி என்று அழைக்கப்படும் இச்சொல் தமிழரின் ஓர் தொன்மை ஆயுதமாக திகழ்ந்த வரலாற்றை, முற்காலத்திய சுவடுகள் மற்றும் நாவல்கள் மூலமாக அறியமுடிகிறது.

## மருதுபாண்டியர்களும் வளரியும்

சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்த மருதுபாண்டியர்கள் வளரி ஆயுதத்தைப் பயன்படுத்துவதில் வல்லவர்களாகத் திகழ்ந்துள்ளனர். இம்மன்னர்களின் தளபதியான போர்ப்படைதளபதியும் வளரி எறிவதில் வல்லவருமான வைத்தியலிங்க தொண்டைமான், வளரி எறிபடையை நடத்தியுள்ளார். சிவகங்கை அருங்காட்சியகத்தில் இந்த வளரி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

## பாளையக்காரர்களின் போர்களில் வளரி

பாளையக்காரர்களுடன் நடந்த போர்களில் இதே வளரியை கொடிய இயல்புள்ள ஆயுதமாகவும் கும்பினிப்படை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பாளையக்காரர்கள் வளரி வீசுவதில் வல்லவர்களாய் இருந்தனர். கும்பினி இராணுவத்தின் பீரங்கிப்படையை எதிர்த்துப் போரிடும் துணிச்சலை வளரி பெற்றுத்தந்தது. கொரில்லாப் போர் முறையில் பயன்படுத்தப்பட்ட வளரி, கண்ணிமைக்கும் நேரத்தில், பறந்து வந்தும் கும்பினிப்படை வீரர்களின் தலைகளை அறுத்து உயிர்களைப் பறித்தது. கும்பினிப்படை வளரியைக்கண்டு அஞ்சிப் பின்வாங்கியது என்பது வரலாறு.

## நாவலில் வளரி

எதிரியைத் தாக்கிவிட்டு கைக்குத் திரும்பவரும் தமிழனின் அரிய ஆயுதம் வளரி. இது பிறைநிலா போன்ற தோற்றத்தைக் கொண்டு விளங்கும். இரும்பாலும், தந்தத்தாலும், மரத்தாலும், செய்யக்கூடிய அரிய ஆயுதம். வளைந்த வாளை எறி என்பதே வளரி. ஆஸ்திரேலிய

ஆதிவாசிகள் உபயோகித்த (பூமராங்)) வளரி போன்ற வடிவத்தில் இருந்துள்ளது. ஆனால் அயல் நாட்டினர் அதை விளையாட்டுப் பொருளாகவே பயன்படுத்திவந்துள்ளனர். அவர்களுக்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே வளரியை ஆயுதமாகப் பயன்படுத்தியவன் தமிழன்.

ஆறு முதல் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் கிருஷ்ணனின் சுதர்ச்சனசக்கரம் போல் தமிழர்களின் கையிலிருந்த இந்த ஆயுதம் ஆங்கிலேயர்களை அச்சுருத்தியது. போருக்கும் வேட்டைக்கும், வேல்கம்பு, ஈட்டிக்கு பின் வாளுக்கு மாறிய தமிழன் பின் எதிரியை மிரளவைக்க, நிலைகுலைய வைக்கப் பயன்படுத்திய ஆயுதம் வளரி.

வளரி வீசும்போது விசை குறையக்கூடாது. ஆயுதத்தின் எடை கூடினால் வீசமுடியாது குறைந்தால் அதிக தூரம் செல்லாது. ஒரு இரும்புத்துண்டு அதன் இலக்கை நோக்கிச் செல்வதற்கு அடிப்படையான எடைக் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். எடைக்கட்டுப்பாட்டுடன் விளங்கும் ஆயுதம் வளரி.

காவல்கோட்டம் நாவலில் மாயாண்டி என்ற கதாப்பாத்திரம் கன்னம் போடும்போது வளரி எரிந்தால், ஆளின் தலைதுண்டாகிவிழும் என்ற கருத்தை அறியமுடிகிறது.

கள்ளர்கள் இனத்தில் சிறுவர்களுக்கு ஐந்துவிதமான பயிற்சிகள் வழங்குகின்றனர். ஓடுவது, தாண்டுவது, எறிவது, தூக்குவது, சாப்பிடுவது. இவ்வைந்தையும் கற்று வளருபவனே சிறந்த காவல்காரனாக இருக்க முடியும். முதலில் கருப்புகோவிலிருந்து தூரத்தில் இருக்கும் ஒற்றைப் பனைமரத்தில் எறிய வேண்டும். இரண்டாவது எறிமரத்தில் எறியவேண்டும். மூன்றாவது எறிமரத்தின் நடுவில் மரங்கொத்திபோட்ட ஓட்டையைச் சுற்றி எறியவேண்டும். இவ்வாறு வளரி எரியும் விதத்தினை காவல்கோட்டம் நாவலின் மூலம் அறியமுடிகிறது.

பண்டையகாலத்தில் வளரிவேட்டை ஆயுதமாக இருந்தது. பின்னர் தமிழின் வரலாற்றில் வளரி எனும் சொல் வீரத்தின் குறியீடு, விசையின் குறியீடு, பரங்கியர் படையை நடுங்கச் செய்த தென்தமிழகத்துப் போர்முறையின் குறியீடாக திகழ்ந்த பெருமைக்குரிய ஆயுதமாக உள்ளது.

தென்னிந்திய ஆய்வுச் சான்றுகளில் வளரி எனும் சொல் கி.பி 10-11 ம் நூற்றாண்டு காலத்தில் காணமுடிகிறது. இந்தக் கருவி எப்போது உருவாக்கப்பட்டது என்ற சான்றுகள் இல்லாததால் தெளிவாக வளரியின் தொன்ம வரலாற்றைக் குறிப்பிடமுடியவில்லை.

## இலக்கியங்களில் வளரி

தமிழ் இலக்கியங்களில் வளரி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. காடும் காடுசார்ந்த இடமும் முல்லை. முல்லைக்குத் தலைவன் மாயோனின் ஆயுதம் வளரி என்கிறது கலித்தொகை. கள்ளர்களின் திருமணத்தில் முக்கிய அம்சமாக வளரியை வைத்துள்ளனர் என்கிறார் ராபர்ட் புரோஸ்.

‘‘குறிங் கோல் எறிந்தநெடுஞ் செவிக் குறு முயல்
நெடுநீர்ப் பரப்பின் வாளையொடு உகளுந்து’’

(புறநானூறு 339)

ஆனிரை மேய்க்கும் கோவலர் பூப்பறிக்கும்போது அங்கு மேயும் முயலை நோக்கி, அவர்கள் குறுங்கோல் என்றும் வளரியை வீசுவர். அந்த முயல் தப்பி ஓடி அங்குள்ள பரந்த நீர்நிலையில் வாளைமீனோடு சேர்ந்து புரண்டுதுள்ளும். என்ற குறிப்பை புறநானூறு வழி அறியமுடிகிறது.

‘‘காடுபகுதிமுல்லை, முல்லையின்

ஆட்சியாளர் மால்,மாயோனின்

கள்வன் என்று அழைக்கப்பட்டார்

அவரதுஆயுதம் வளரி''.

(கலித்தொகை)

மாயோனின் ஆயுதமாக வளரி விளங்கியதை கலித்தொகைபாடல் மூலம் தெளிவாகிறது.

''வளரி படையை கொண்டிருந்தமால்

என்ற சோழன்'' (சிலப்பதிகாரம்)

சோழன் வளரி படையைக் கொண்டிருந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

''புறவுஅணிகொண்ட பூ நாறுகடத்திடை,

கிடின் என இடிக்கும் கோல் தொடிமறவர்

வடி நவில் அம்பின் வினையர்''

(நற்றிணை-48)

முல்லை நிலம் பூத்து மணம் பரப்பிக் கொண்டிருக்கும் காட்டுவழி. இடி போன்ற முழக்கத்துடன் வழிப்பறி மறவர்கள் அங்கு தோன்றுவர். மின்னல் வேகத்தில் தாக்கும் கோலை உடையவர். கூர்மையான அம்பு எய்வதில் அவர்கள் வல்லவர்கள்.

இவ்வாறு இலக்கியங்களில் வளரியை மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர் என அறியமுடிகிறது.

## சிறுதெய்வ வழிபாட்டில் வளரி

மதுரைக்கு அருகிலுள்ள கோவிலங்குளம் என்னும் கிராமத்தில் 200 வளரிகள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இன்றும் மதுரை சித்திரை திருவிழாவின்போது கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும்போது இடுப்பில் வளரி வைத்திருப்பாராம்.

14-ம் நூற்றாண்டில் பழமை வாய்ந்த வளரி முத்தரையர்களின் முதன்மை ஆயுதமாக இருந்துள்ளது. முத்தரையர், அம்பலக்காரர், வலையர், வலையமார்கள் வாழும் பகுதிகளில் வளரி ஆயுதத்தை காணமுடிகிறது. குலதெய்வ வழிபாட்டில் தனது முன்னோர்களின் வேட்டை மற்றும் காவல் ஆயுதமாகவும் முத்தரையர் மக்களால் வழிபடப்படுகிறது.

ஆங்கிலேயர்களுக்கு எதிராக வளரியும், வளரியை கையாளும் வலையர் மக்களும் அழிக்கப்பட்டனர். வரலாற்றில் ஒடுக்கப்பட்ட நிலையில் தள்ளப்பட்டனர்.

## முடிவுரை

நவீன காலத்தில் துப்பாக்கி, ஏவுகணை போன்ற தொழில்நுட்ப ஆயுதங்களைப் போல 1500 ஆண்டகளுக்கு முன்னரே ஆதித் தமிழன் அதிசயிக்கத்தக்க திறனைகொண்ட ஓர் ஆயுதத்தை உருவாக்கி பயன்படுத்தியுள்ளனர் என்பதை எண்ணிப் பார்க்கையில் தமிழர்களின் அறிவுத்திறனுக்கு சிறந்த சான்றாக வளரி ஆயுதம் உள்ளது. இன்றளவும் எவராலும் உருவாக்க இயலாத நுண்ணறிவு திறனையும், வியக்கத்தக்க வரலாற்றையும் கொண்டுள்ள வளரி ஆயுதத்தை தமிழன் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உருவாக்கிப் பயன்படுத்தியுள்ளான் என்பது வீரச்சரித்திரமாகும்.

பார்வை நூல்கள்

1) காவல்கோட்டம்- சு. வெங்கடேசன்
2) புறநானூறு
3) நற்றிணை
4) சிலப்பதிகாரம்
5) கலித்தொகை
6) வளரி – கதைகளின் கதை - சு. வெங்கடேசன்